**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 302 of 2013**

**Deposition of Witness P. W.8**

| | |
|---|---|
| **Name : திருமாவளவன்** | **Father/Husband's Name: வெங்கடேசன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 04.01.2023**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தட்டான்குளத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 2012ம் வருடம் காலை சுமார் 12 – 12.30 மணியளவில் வேலுச்சாமி மருத்துவமனை சந்து அருகில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வைமகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் கையொப்பம் போட்ட பார்வைமகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போட்ட இடத்தில் 4, 5 நபர்கள் இருந்தார்கள். என்னுடன் வேறு யாரும் கையொப்பம் போட்டார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் ஏற்கனவே எழுதி வைத்திருந்த தாளில் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

3. நான் திண்டுக்கல் மெயின் ரோட்டிற்கு வருவதற்காக அந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தேன். போலீசார் அங்கு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

சம்பவயிடத்தில் வழக்கறிஞர் திரு.சிவசாமி என்பவரது வீடு உள்ளது. சம்பவயிடத்தில் வேறு வீடு, கடை உள்ளதா என்று எனக்கு தெரியாது. போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.01.04 18:49:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**